FAMILY SERVICE TORONTO
For People. For Change.

பெண்கள் மீதான வன்முறைக்கு எதிரான சேவை

## நீங்கள் உங்கள் குடும்ப உறவில் துன்புறுத்தலுக்குள்ளாகின்ற ஒரு பெண்ணாக இருந்தால், உங்களுக்கு எங்களால் உதவ முடியும்.

## நீங்கள் தனித்து நிற்கும் பெண் அல்ல.

உடல் ரீதியாகவோ, உணர்ச்சி ரீதியாகவோ, உளரீதியாகவோ அல்லது இவை எல்லாம் கலந்த விதத்தில் பெண்கள் தமது உறவுகளாலே சில வேளைகளில் துன்புறுத்தப்படுகின்றனர். இது அனைத்து இன, மத, வர்க்க சமூக அமைப்புக்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஒரு பெண் என்ற ரீதியில் உங்களை இழிவான பெயரைக்கொண்டு அழைக்கலாம், உங்கள் குடும்ப அங்கத்தவர்களோடோ, அல்லது நெருங்கிய நண்பர்களோடோ தொடர்பு வைத்திருப்பதைத் துண்டிக்கலாம், உங்களை உடல் ரீதியாக காயப்படுத்தியும், கட்டுப்படுத்தியும் கொண்டு உங்களைப் பற்றி பொய்யான விடயங்களைப் பேசித்திரியலாம். அதே வேளையில் உங்களைத் துன்புறுத்திக்கொண்டிருக்கும் அதே நபருக்கு பணிவிடை செய்து, அவரோடு வாழ்ந்து குழந்தைகளைப் பெற்று, பொருளாதார ரீதியில் அவரில் தங்கியிருப்பது உங்களுக்கு எப்பொழுதும் கடினமானதாகவே இருக்கும்.

ரொறன்ரோ குடும்ப சேவையால் (Family Service Toronto) நடாத்தப்படும் “பெண்கள் மீதான வன்முறைக்கு எதிரான சேவை“ மேற்குறிப்பிட்ட விதத்தில் துன்புறுத்தலுக்குள்ளாகும் பெண்களைப் பாதுகாத்து, அவர்களைப் பலப்படுத்தி அவர்கள் சரியானவற்றைத் தெரிவுசெய்து தங்கள் வாழ்க்கையில் நல்ல மாற்றத்தைக் கொண்டுவர உதவுகின்றது.

## நாம் எப்படி உதவுகின்றோம்

ஒவ்வொரு வருடமும் எம்மிடம் உதவி நாடிவரும் ஆயிரத்திற்குமேற்பட்ட பெண்களுக்கு நம்பகத்தரமான ஆதரவளித்து வருகின்றோம். தொலைபேசியூடாகவோ, தனிப்பட்ட விதத்தில் நேரடியாகவோ, குழுமமாகவோ நாங்கள் உங்களுக்கு செவிமடுப்போம். நீங்கள் பின்வருபவற்றை கற்றுக்கொள்வீர்கள்:

- நீங்கள் தனிமையில் இல்லை, உங்களுக்கு பல வழிகலும் உதவி உண்டு
- உங்கள் பாதுகாப்பை அதிகரித்துக்கொள்ளவும் உங்களைத் தகுந்த முறையில் கையாழும் புதிய திறமைகளை கற்றுக்கொள்ளவும்
- துன்புறுத்தல் என்றால் என்ன? அது ஏன் நடக்கின்றது?
- உங்கள் பலத்தைக் கட்டியெழுப்பவும், உங்களது சுயமதிப்பை அதிகரிக்கச் செய்யவும்
- உங்கள் வாழ்க்கையில் கட்டுப்பாட்டை மீளக்கொண்டுவரவும், வாழ்க்கையில் நம்பிக்கை கொள்ளவும்

பெண்கள் மீதான வன்முறைக்கு எதிரான சேவை

· மிக மோசமான சூழ்நிலையிலும் கூட எப்படி உங்கள் வாழ்க்கையை நடாத்திச் செல்வது என்பதை திட்டமிடுவது.

ரொறன்ரோ நகரில் வாழுகின்ற அல்லது பணியாற்றுகின்ற பல தரப்பட்ட பின்னணிகளைக் கொண்ட, பல மொழி பேசுகின்ற பெண்களுக்கு, அத்தோடு புத்திக் குறைபாடுள்ள பெண்களுக்கும் நாம் சேவை அளிக்கின்றோம். மேலும் இவர்களை மற்றைய பணி நிலையங்களோடு தொடர்புபடுத்தி அந்தந்த சேவைகளை அவர்கள் பெற்றுக்கொள்ள வழிவகுக்கின்றோம். உதாரணமாக இருப்பிட ஒழுங்கு, சட்ட ஆலோசனைகள், நீண்ட கால வீடமைப்புத்திட்டம் போன்றவை.

## கருணை. சமூகம். தொடர்பு.

மக்களுக்கு உதவி செய்வதையே ரொறன்ரோ குடும்பசேவை மன்றம் தனது பெருவிருப்பாகக் கொண்டுள்ளது.

உடல்ரீதியான துன்புறுத்தல், மன அழுத்தம், பாலியல் வேறுபாடு, உறவுப் பிரச்சனை, அங்கக் குறைபாடு, வயது முதிர்ச்சியினால் தோன்றும் சவால்கள் போன்ற பல தரப்பட்ட விடயங்களினால் தவித்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு நாம் அளிக்கும் பல வகையான உளவளத்துணை, சமூக உதவிச்சேவைகள் பேருதவியாக விளங்குகின்றன.

## எங்களோடு தொடர்பு கொள்ள...

பெண்கள்மீதான வன்முறைக்கு எதிரான சேவை பற்றி அறிவதற்கோ அல்லது ரொறன்ரோ குடும்ப சேவை (Family Service Toronto) பற்றி அறிந்துகொள்வதற்கோ அல்லது எமது சேவையைப் பெற ஒரு நேரத்தை ஒழுங்கு செய்வதற்கோ நீங்கள் அழைக்கவேண்டிய தொலைபேசி எண்: 416-595-9618

பெண்கள் மீதான வன்முறைக் கெதிரான சேவைக்கு கட்டணம் எதுவும் அறவிப்படமாட்டாது.

இன, மத, நிற, மொழி, பாரம்பரிய, பிறப்பு இடம், குடியுரிமை, பால், வயது, உடல் குறைபாடு, கல்வி நிலை, திருமண நிலை, குடும்ப நிலை, வருமானம், அரசில் கொள்கை வேறுபாடின்றி எமது சேவைகளை ரொறான்ரோ நகரில் வசிக்கின்ற, பணியாற்றுகின்ற எவரும் பெற்றுக்கொள்ள முடியும்.

எமது இணைய முகவரி: www.familyservicetoronto.org

இந்த சேவையின் ஒருபகுதி ஒன்ராறியோவின் சமூக சமுதாய சேவைகள் அமைச்சின் உதவியோடு நடாத்தப்படுகின்றது.

For People For Change
FAMILY SERVICE TORONTO

United Way
Member Agency